பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 32 திங்கட்கிழமை (16 08 1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 251

## பொருளாதாரத் தடையை நீக்கி

# ராணுவத் தாக்குதல்களை நிறுத்த உதவுமாறு ஐ. நாவிடம் கோரிக்கை

## உலகத் தமிழர் அமைப்பு மனு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 16


ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழீழ மக்களுக்கு எதிராக மேற்கொண்டுவரும் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தவும், பொருளாதாரத் தடையை நீக்கவும் ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலகத் தமிழர் இயக்கம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு அனுப்பி வைத்த விண்ணப்பம் ஒன்றிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

ஜேர்மனியிலிருந்து உலகத் தமிழர் அமைப்பின் தலைவர்களில் ஒருவரான திரு. நரேந்திரசிங் இது தொடர்பான அறிக்கையை

(8 ஆம் பக்கம் பார்க்க)



நல்லையம்பதியில் உறையும் வல்வினை தீர்க்கும் வடிவேல் முருகா! இன்று காலை நீ தங்கத் தேரேறி அருட்பவனி வருகின்றாய். அந்த அருட்காட்சியைக் காண உனது பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஆலய வீதிகளில் திரளுவர்.

வேற்படை வேந்தே! கோலமயில் வாகனனே!

அவர்களுக்கு நல்லருள் ஈந்து அல்லல் அகற்றி அருள் புரிவாய்!

[தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் உள்ளே]

# கடல் வழிப்பாதையில் 328 பேர் அரச படைகளால் படுகொலை!

யாழ்ப்பாணம், ஆக. 16

யாழ். குடாநாட்டுக்கு வெளியே செல்லும் கடல் வழிப் பாதையால் பயணம் செய்த 328 பொதுமக்கள் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் "சிட்னிமோனிங் ஹெரோல்ட்" பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

ஸ்ரீலங்காப் படைகள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்டுள்ள இராணுவத் தாக்குதல்களினால் குடாநாட்டின் 9 லட்சம் தமிழ் மக்கள் வெளியுலகுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இருப்பதாக ஐக்கிய திருச்சபையைச் சேர்ந்த வண. ஜெபநேசன் ஆண்டகை தெரிவித்ததாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். குடாநாட்டுக்கு வெளியே செல்லும் கடல் வழிப் பாதையை ஸ்ரீலங்காப்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## யுத்தக் கைதிகளை விடுவிக்குமாறு

# அரசுக்கு அழுத்தம் கொடுக்க மாத்தறையில் மறியல் போர்

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி யுத்தக் கைதிகளின் உறவினர்கள் கொழும்புக்கு வெளியே மாத்தறை மற்றும் பல பகுதிகளில் தொடர் மறியல் போராட்டங்களை நடத்தவிருப்பதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

அரசுக்கு அழுத்தம் கொடுத்து யுத்தக் கைதிகளை விடுதலை செய்ய உதவுமாறு கோரி கடந்த 11 ஆம் திகதி கொழும்பு நகரில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது தெரிந்ததே.

அடுத்த போராட்டம் மாத்தறையில் நடக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (உ-3)

# கைதிகள் உயிருக்கு ஊறு நேர்ந்தால் நல்லெண்ண முயற்சி பாதிப்புறும்

## ஹமில்டன் கூறுகிறார்

கொழும்பு, ஆக. 16

"யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளின் உயிருக்கு ஏதாவது ஊறு நேர்ந்தால் அதன் விளைவுகளை விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்கவேண்டி வரும். யுத்தக்கைதிகள் உயிருக்கு ஊறு நேரும் பட்சத்தில், பின்னர் நல்லெண்ண முயற்சி பற்றிய பேச்சுகளுக்கு அர்த்தம் இருக்காது".

—இவ்வாறு கூட்டுப்படைகள் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்.

தினமுரசு வாரமலர் இச்செய்தியை வெளியிட்டிருப்பதாக இலங்கை வானொலி அறிவித்தது. (உ-எ)

## தொப்பிகலயில் சிப்பாய் பலி!

கொழும்பு, ஆக. 16

மட்டக்களப்பு மாவட்டம்—தொப்பிகல காட்டுப்பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவரை விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) சுட்டுக் கொன்றனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (உ-எ)

# பொலனறுவையில் கைதான 20 தமிழர் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஆக 16

பொலனறுவை மாவட்டம் திம்புலாகல, வில்லானந்த பகுதியை, கடந்த மாதம் சுற்றிவளைத்த படையினர் அங்கிருந்து சுமார் நூறு தமிழர்களைக் கைது செய்து கொண்டு சென்றதாகவும்—

அவர்களில் இருபது பேர் தொடர்ந்து ஒரு மாதத்திற்கு மேலாக தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் "புலிகளின் குரல்" அறிவித்தது.

அவர்களை விடுவிக்க அவர்களது உறவினர்கள் மேற்கொண்ட முயற்சியும்—

இவ்விடயத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் எடுத்த முயற்சியும்—பலனளிக்கவில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

# கொழும்பில் புலிகளின் ஊடுருவல் பற்றித் தகவலாம்

கொழும்பு, ஆக. 16

கொழும்பில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் நடவடிக்கைகள் பற்றி பாதுகாப்புப் படையினருக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும்—

அதன் அடிப்படையில் விடுதலைப்புலிகளின் ஊடுருவலை முறியடிக்க தீவிரமான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இலங்கை வானொலி தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வைத்திருப்போர் மற்றும் சதி வேலைகளுக்கு உதவி புரிவோர் போன்றோர் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் இலங்கை வானொலிச் செய்தி [illegible] (உ-எ)

# ஈழ அகதிகளுக்கு சுவிஸில் விசேட வசதிகள் கிடையா

## பொறுப்பதிகாரி தகவல்

பொன், ஆக 16

சுவிட்சர்லாந்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கென விசேட வசதிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

சுவிஸ் அகதிகளுக்கு பொறுப்பான அலுவலகத்தின் இயக்குநர் பீற்றர் ஆமென் இவ்வாறு தெரிவித்தார்.

"அகதிகளை திருப்பி அனுப்புவதன் மூலம் இலங்கை அரசுக்குச் சங்கடமான நிலையை ஏற்படுத்த சுவிஸ் விரும்பவில்லை. மனிதாபிமான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கவும் நாம் விரும்பவில்லை. 1992க்குப் பின்னர் வந்த அகதிகளே திருப்பி அனுப்பப்படவுள்ளனர்" —என்றும் அவர்

[2 ஆம் பக்கம் பார்க்க]

# மட்டக்களப்பில் படையினரின் கெடுபிடி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் கெடுபிடி நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அடிக்கடி சுற்றி வளைப்பில் ஈடுபடும் படையினர் 15 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகளையும் கைது செய்து சென்று இரண்டு மூன்று நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றனர் என்று கூறப்படு

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பென்ஷன் முரண்பாடுகளை ஆராய்வதற்கு குழு நியமனம்

## முறையீடுகளை அனுப்பலாம்

கொழும்பு, ஆக. 15

பென்ஷன் கொடுப்பனவு முரண்பாடுகள் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கவென விசேட குழு ஒன்றை பொது நிர்வாக மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு நியமித்திருக்கிறது.

பென்ஷன் கொடுப்பனவுகளை வழங்குவதிலும் தயாரிப்பதிலும் உள்ள முரண்பாடுகளை நீக்குவது குறித்து இக்குழு ஆராய்ந்து உரிய சிபாரிசுகளைச் செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பென்ஷன் சம்பந்தமான முறையீடுகளை ஆறு வார காலத்தில் கிடைக்கும் வகையில் "செயலாளர், பென்சன் திணைக்களம், 54, சத்தாம் வீதி, கொழும்பு—1" — என்ற முகவரிக்கு பொதுமக்கள் அனுப்பலாம் என்றும் — குழு தனது சிபாரிசுகள் அடங்கிய அறிக்கையை நான்கு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

---


# வங்கியாளர் பரீட்சை
(இடை நிலைத்தேர்வு)
1993 நவம்பர்

கணக்கியல் மீட்டல் விரிவுரைகள்
ஆரம்பம்: 22 - 08 - 1993
ஞாயிறு 12 மணி

விரிவுரையாளர்:
திரு. V. உருத்திரலிங்கம்

குறிப்பு: கடந்த கால வினாத்தாள்களும் மீட்டல் செய்யப்படும்.

விவரங்களுக்கு:
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை
57/48, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி-5598)


---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 — 10 — 1922

உதிர்வு: 28 — 07 — 1992

## அமரர் குமாரசாமி வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய மாவட்டக்காணி உத்தியோகத்தர் D.L.O.)

திதி: 16 - 08 - 1993

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! திருவுருவே! அன்புச் சிகரமே! இன்று சிவத்தோடு கலந்திட்ட எம்முயிரே! உங்கள் திங்கள் முகம் மறைந்து ஆண்டொன்று கழிந்த பின்பும் எம் நெஞ்சில் பற்றிய வேதனை தீ அணையவில்லை. உங்கள் இழப்பு ஆறாது; மாறாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்.

பிள்ளைகள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(26926)

---

# 30ஆம் நாள் அஞ்சலி



தோற்றம்: 13 — 05 — 1922

மறைவு: 18 — 07 — 1993

## அமரர் செல்லையாபிள்ளை யோகேஸ்வரன்

(முன்னாள் நிர்வாக செயலாளர், யாழ்/ போதனா வைத்தியசாலை)

எங்கள் அன்பான அப்பாவே!
உங்கள் திடீர் பிரிவால் நாங்கள்
நன்றாக சோர்ந்துவிட்டோம்
எங்களை அன்போடு, பரிவோடு
ஆதரித்து அரவணைத்த
உங்களுக்கு ஈடாக யாருள்ளார் -
இப் பூவுலகில்?

வாணி ஜெயக்குமார்,
மேனகா ஜெயக்குமார்.

"மணியம் வளவு"
தாமோதரம் வீதி,
சாவகச்சேரி.

[26958]

---

## இன்று

நாவாந்துறை புனித பரலோக மாதா கோயில் திருநாளை ஒட்டி சென். மேரிஸ் சனசமூக நிலையம் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் இன்று திங்கள் இரவு 7மணிக்கு சென். மேரிஸ் கலையரங்கில் நடைபெறும்.

சென். மேரிஸ் கவின் கலைகள் பயிலக மாணவிகளின் இசை, நடன, நிகழ்ச்சிகள், சிறுவர் நாடகம் மற்றும் இம்மானுவேலின் நாட்டுக் கூத்து ஆகியவை இன்று இடம் பெறும். (த)

---

## ஈழ அகதிகளுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூறினார்

"சுவிஸில் உள்ள 22 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களில் 17 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. இவர்களை விட மேலும் பல அகதிகள் தலைமறைவு வாழ்க்கை நடத்தி வருகின்றனர்."

"சுவிஸ் மக்கள் நல்ல சகிப்புத்தன்மை கொண்டவர்கள். அகதிகள் வருகையால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து உள்ளது: ஆனால் மேலும் சுமைகளை நாம் ஏற்கத் தயாராக இல்லை. அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்தவர்களில் இரண்டு சதவிதமானோரே இங்கு தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்." சுவிஸில் சம்பாதித்த பணத்தை எடுத்து செல்ல இலங்கை திரும்பும் அகதிகளுக்கு அனுமதி வழங்கப்படும்." — இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

(உ-எ)

---

## கடல் வழிப்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைகள் தடை செய்துள்ளன அவ்வழியே பயணம் செய்வோர் மீது ஸ்ரீலங்காப் படைகள் தாக்குதல் நடத்துகின்றன.

ஆயுதப் படைகளை எதிர்த்துப் போராடி பயணிகளின் பயணத்துக்கு விடுதலைப் புலிகள் உதவுகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசு குண்டு வீச்சு விமானங்கள் மூலம் தமிழ் மக்களின் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்துகிறது.

பொருளாதாரத் தடையை விதித்து தமிழ் மக்களை ஸ்ரீலங்கா அரசு பட்டினி போடுகிறது.

தமிழ் மக்களின் மொத்த உணவுத் தேவையில் 32 சதவீதமான பொருள்களே அனுப்பப்படுகின்றன.

இதனால் போசாக்கின்மை - குறிப்பாக சிறுவர் போசாக்கின்மை — நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு [illegible] மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

---


கொடிச்சிலைத் தேர் திருப்பணிச்சபை

# அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குக் கொடிச் சீலை வழங்கிவரும் சித்திரத்தேரின் புனருத்தாரண வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. முருகன் அடியார்களையும், சகோதர, சகோதரிகளையும், தர்மசீலர்களையும், அன்பர்கள், நண்பர்களையும் தமது பங்களிப்பினைத் தந்து உதவும்வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தொடர்பு:
திருப்பணிச்சபையினர்.

தேரின்பாதுகாவலன்:
க. குருநாதன்,
வேல்முருகன் ஆலயம்,
கொடித்தேர் மடம்,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(சி/5595)


---

# நன்றி நவிலல்

## க. மார்க்கண்டன்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் ஆங்கில, விளையாட்டுத்துறை ஆசிரியரும், சமூகசேவையாளரும், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நீண்டகால உறுப்பினரும், முன்னாள் உபதலைவருமாகிய அமரர் திரு க. மார்க்கண்டன் அவர்களின் 13.8.93 வெள்ளிக்கிழமை நடந்த ஈமச்சடங்குகளில் பங்குகொண்டும் மற்றும் உதவிகளைச் செய்த அனைவர்க்கும் எமது உள்ளம்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.


56, பண்டிதர் மாணிக்கத்தியாகராஜா,
சுன்னாகம்.

தகவல்:-
க. சிறிலங்கராஜா.

(6624)

---

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நினைவஞ்சலியும்



தோற்றம்: 01 — 06 — 1922

மறைவு: 20 — 05 — 1993

அமரர்

## கந்தையா சிவப்பிரகாசம்

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர் - மண்டைதீவு)

அன்பும், அறிவும், அறமும் ஓங்க! கல்விப் பணி, சமயப் பணி, சமூகப் பணியாற்றி எங்கள் உயர்வுக்கும், விடிவுக்கும் வழிகாட்டி வளம் சேர்த்து, உயர்வாழ்வு வாழ வைத்த எங்கள் குலவிளக்கே! என்றும் மறவோம். உமது இலட்சியங்கள், உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


எமது குடும்பத் தலைவரின் மறைவு கேட்டு எமக்கு ஆதரவு காட்டி, தேறுதல் கூறி, ஆவன செய்த அத்தனைபேருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (17 - 08 - 1993) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்தியங்களிலும், ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரையும் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

9, கச்சேரி லேன்,
கொட்டடிக்குளி.

(26955)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

16-08-1993



## வேல், வேல் என்று முருகனைத் துதிக்க வெல், வெல் என்று அவன் அருளுவான்

முருகன் கலியுக வரதன், இந்தக் கலியுகத்தில் நலிவுகள் போக்கி பொலிவையும், பூரிப்பையும் தரவந்த புண்ணியன். "பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பும், திருமேனிகொண்டு கருணைகூர் முகங்கள் ஆறோடும், கரங்கள் பன்னிரண்டோடும், உலகம் உய்ய வந்தாங்கு

### வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும்

உதித்து அடியார் உள்ளங்களிலே, வேலாகவும், மயிலாகவும், முருகவேளாகவும், கந்தனாகவும், கடம்பனாகவும், அழகனாகவும், குழகனாகவும், குமரனாகவும், குகனாகவும், கார்த்திகேயனாகவும், குருபரனாகவும், குருமூர்த்தியாகவும், குலவிக் குடியிருக்கின்றான். குன்றிலும், மலையிலும், கூத்தாடிக் குழந்தை வடிவமாய் சென்றிடும் திசையெல்லாம் திருக்கோவில்களிலே அழகொழுக வீற்றிருந்து என்றுமில்லாத பேரின்பத்தைத் தருகின்றான்.

"முருகா" எனும் அவன் திருநாமத்தை ஓதுவோர்க்கு "நாம் இருக்கப் பயமேன்" என்று வேலேந்தி வந்து வினை தீர்ப்பான். முருகன் அடியார்கள் மூவுலகிலும் அருகாத செல்வம் அடைவர். அவர்களை வியாதிகள் அணுகாது. ஒருகாலமும் அவர்கள் துன்புறார்கள். விழிக்குத் துணையாக அவனுடைய திருமென் மலர்ப் பாதங்கள் ஒளிகாலும். மொழிக்குத் துணையாக முருகா என்னும் நாமம் முன்னின்று மெய்மையை வெளிப்படுத்தும். பழிக்குத் துணையாக அவனுடைய பன்னிரு புயங்களும் அபயமளிக்கும். பயந்த தனி வழிக்குத் துணையாக வேல் நம்மை வழிநடத்தும். சேவலும், மயிலும் எம் ஆவலை உள் நின்று ஊக்கி நல் நிலைக்கு உய்க்கும். காதலும், கற்பும் வள்ளியாய், தெய்வானையாய் வாழ்க்கையை வழி நடத்தும்.

### நல்ல வண்ணம் வாழ வழி

நாளும், கோளும் முருகனடியார்களை நலியச் செய்யாது. இதனை —

"நாளென் செய்யும் வினை தானென் செய்யுமெனை நாடிவந்த
கோளென் செய்யுங்கொடுங் கூற்றென் செய்யுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே"

என்றார் அருணகிரியார்.

சங்ககாலப் புலவர்களான, நல்லந்துவனார், கடுவன் இளவெயினனார், குன்றம்பூதனார், கேசவனார், நப்பண்ணனார், நல்லச்சுதனார், நல்லழுச்சியார், நக்கீரர் மற்றும் அருணகிரியார், குமரகுருபரர். சிதம்பரசுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் இன்னும் பிற காலத்தவரான பாரதியார், சுந்தராம்பாள், சௌந்தரராசன், கிருபானந்தவாரியார் பித்துக்குளி முருகதாஸ் ஆகியோர் முருகனைப் பாடிப் பாடி அவர்தம் பாட்டுத்திறத்தால் முருகன் அருள்பாலித்திடச் செய்தார்கள்.

முருகனின் திருக்கரத்தில் இருக்கும் வேல், அது வீரவேல், தாரைவேல். விண்ணோர் சிறைமீட்ட தீரவேல், வாரிகுளித்த வேல், சூர்மார்பும் குன்றும் துளைத்தவேல் எனப் பெருமை பெறுவதாகும் படைகளுக்குள் எல்லாம் பெருமதிப்புடையது வேற்படை. முருகனுடைய ஞான சக்தியே வேல். எல்லாவற்றையும் வெல்வது ஞானம் ஒன்றேயாகும்.

### வேல் போற்றி

ஞானம் ஆழ்ந்து, அகன்று நுண்ணியதாக இருக்கும். அதைத் தெளிவுபடுத்துவதாக, வேலின் அடிப்பகுதி ஆழமாகவும், இடைப்பகுதி அகலமாகவும், நுனிப்பகுதி கூர்மையாகவும் அமைந்திருக்கிறது. ஒருபுறம் சேவலும், மறுபுறம் மயிலும் நிற்கவேல் நடுநாயகமாக நின்று அருள் புரிகின்றது. அதனாற் போலும் கச்சியப்ப சிவாச்சாரியார் சேவலுக்கும் மயிலுக்கும் ஒருமுறை மட்டும் போற்றி கூறி, வேலுக்கு இருமுறை போற்றி கூறுகிறார்:

"சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி" என்றார். வேல் வேல், என்று முருகனை வாழ்த்தினால் வெல், வெல் என்று அவன் நமக்கு ஒளிதந்து வழி நடத்துவான். வெல் என்னும் வினைப்பகுதி (முதல் நிலை) வேல் எனத் திரிந்தே பெயர்ச்சொல்லாக அமைந்தது. இதனால் இப்படை ஒன்றே வெல்லும் தன்மையைப் பெற்றுள்ளது. ஏனைய படைகள் வெற்றிக்குப் பயன் பெற்றாலும், சொற்கும் பொருட்கும் உயிராக மெஞ்ஞானத் தோற்றமாக நிற்பது வேற்படையொன்றேயாகும்.

முருகனுடைய வேல் சூரனுடைய மருளைப்போக்கி அருளைக் கொடுத்தது. போற்றுபவர்க்கு அறக் கருணையையும், அல்லாதவர்க்கு நிகரில்லாத மறக் கருணையையும் புரிந்து ஆட்கொள்ள வல்லதே முருகனுடைய ஞான வேல்.

"தோகை மேல் உலவும் கந்தன் சுடர்க் கரத்தில் இருக்கும் வெற்றி.
வாகையே சுமக்கும் வேலை வணங்குவது நமக்கு வேலை"

என்று நாம் தினமும் துதித்து, இடர் வந்தபோது, ஆறுமுகனைச் சரணடைந்தால், வேல் தோன்றி வினை தீர்க்கும் என்பது உறுதி.

குருவாய், வருவாய், அருள்வாய், குகனே!



— நாக. சண்முகநாதபிள்ளை —

## கவிதைத் தேர் வலம்

தேரடியில் சென்று தரிசித்தால் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை - நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே சேளீர் நலம்.

— யோகர்சுவாமிகள்.

### நீதியருள், தேரிலின்று வா!

எழில் பொழியும் நல்லையினில்
ஏற்றமுடன் குடிகொண்டு
எமக் கருளும் ஆறுமுகவா!
பழம் கொள்ள மயிலேறிப் பாரைவலம்
வந்து "பழம்
நீ" என்ன நின்ற புதல்வா!
பழி சொரியும் அசுரர்களின்
பகையறுத் தமரர்களின்
பதம் மீட்டளித்த இறைவா!
நிழலனைய தமிழடியர்
நிலங்காத்துக் குலங்காக்க
நீதியருள், தேரிலின்று வா!

— சிற்பி

### தங்கவேலா தேரில் வருக!

தங்கவேலோடு பச்சை மயிலேறும்
தமிழ்த் தெய்வமே வருக
பொங்கும் புகழோடும் பெருமைப்பொலிவோடும்
எமைவாழ வைத்திட வருக
எங்கும் நிறைவாக ஏற்றம் தருகின்ற
அமைதிஅளித் திடத்தேரில் வருக
எங்கள் நாதனே சிவனின் பாலனே
உனைப்பாடித் தொழுகின்றோம் வருக!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

### சண்முகன் வருகின்றான்

சண்முகன் தேரில் வருகின்றான்
தனியொளி தவழ்ந்தே வருகிறது
ஒண்முகன் தேரில் வருகின்றான்
ஓமெனும் ஓசை ஒலிக்கிறது
கண்மணி முருகன் காட்சிமயம்
கனிந்திடும் நல்லையின் மாட்சியிலும்
விண்ணகம் போலும் ஆட்சிதரும்
வேலவன் ஆறு முகம்பொழியும்!

— அரியாலையூர் வே. ஐயாத்துரை.

## நல்லூர்க் கந்தனின் திருத்தேரடி சித்தர் பரம்பரையை உருவாக்கியது

நல்லூரின் கிழக்குப் புறத்திலே அமைந்திருந்த தேரடிக்குத் தனிச்சிறப்பு உடையது. இத்தேரடி யாழ்ப்பாணத்திலேயே ஒரு சித்தர் பரம்பரையை உருவாக்கிய புண்ணியபூமி. கடையிற் சுவாமிகள் எனப்படும் முத்தியானந்தர் முதல் கொழும்புத்துறை யோகியர், ஞானியர், துறவிகள், சித்தர்கள் தங்களது ஞானச் சுவடுகளைப் பதித்து விட்டுச் சென்ற புண்ணிய பூமியே நல்லூரானின் தேரடி.

யோகர் சுவாமிகளின் ஞானகுரு செல்லப்பர் — அவர் நல்லூரான் திருவடி வெள்ளத்திலே நாளும் நனைந்து மூழ்கியிருந்த வேளையிலே நல்லூரை வட்டமிட்ட கடையிற்சுவாமிகளின் கடைக்கண் பார்வையும் தீட்சையும், உபதேசமும் பெற்ற இடமும் நல்லைப்பதியே.

நல்லைத் தேரடியில் செல்லப்பாசுவாமிகள் விசர்ச் செல்லப்பனாக வீற்றிருந்து எவருக்கும் பிடிகொடாமல் நல்லூரானுடன் அர்த்த சாமத்தின் பின் அந்தரங்கமாகத் தொடர்பு கொண்டு தமது ஞானத் தாகத்தைத் தீர்த்துக் கொண்டார். கறுத்த மேனி

(7-ஆம் பக்கம் பார்க்க)

— ம. சிவயோகசுந்தரம் —

அஜந்தா போட்டோ




63, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

கேக், ஐசிங், குளிர்பானங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தரமான பொருள்களையும் மற்றும் பால் மா, பிஸ்கட் வகைகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள:
கணேஷா வர்த்தக நிலையம்
65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்

16 – 08 – 19

## நல்லூரான் திருவடி!

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே
இரவு பகல் காணேனடி.

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி-கிளியே
நல்லூரான் தஞ்சமடி.

- யோகர் சுவாமிகள்

# தேரில் வருகிறான் நல்லை முருகன் தன்னைத் தொழுவார் துயர் தீர்க்க!

முருகு என்றால் அழகு என்பது பொருள் அழகுத் தெய்வத்தை முருகன் என்றனர் ஆன்றோர். முருகன் அழகன். இளையவன், தெய்வத் தன்மை நிறைந்தவன். அருள் பொழிபவன். அவன் தமிழ்க் கடவுள் கலியுகவரதன்.

முருக வழிபாடு இன்று பரந்து விரிந்திருக்கிறது. ''பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு நீல மயிலினில் வீதி வலம் வரும் மயில்வாகனன்'' வழிபடுவோர்க்கு வரையாது வாரி வழங்கும் வள்ளல். அவனை அடைந்தார்க்கு இல்லை வினை பொல்லா வினைகள் தீர்க்கும் நல்லூர் முருகப் பெருமான் இன்று தேரேறி வந்து அருட்காட்சி தர வருகின்றான்.

எல்லாக் கண்டா மணிகளினதும் நாவசைவால் எழுந்த ஒலி, ஓங்கார நாதப் பிரவாகமாக குளிர்ந்த காற்றோடு கூடி உதய சூரியனின் மென் கதிர்களில் திளைத்துக்கொண்டிருக்கும் பக்தர்கள் மீது பரந்து படர்கிறது. திரளான மக்களது ''அரோகரா'' ஓசை வசந்த மண்டபத்தில் இருந்து பொங்கி எழுந்து உள் வீதி, வெளி வீதிகளில் நெருங்கிய பக்தர்களின் உள்ளங்களிலும், உணர்வுகளிலும் அலைமோதிச் செல்கின்றது.

நல்லூர் ஆறுமுகப் பெருமானுக்கு அடுக்குத் தீபம் காட்டப்படுகின்றது. திருவடியும் தண்டையும், சிலம்பும் சிலம்பு ஊடுருவப் பொருவடி வேலும், டமரும், தடம்புயம் ஆறிரண்டும் மருவடிவான வதனங்கள் ஆறும், மலர்க் கண்களும் கொண்டு கஜவல்லி, மாவல்லி சமேதராய்ச் சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள் மழை பொழிகிறான் அப்பன் முருகன். அந்த அற்



புதக் காட்சியைக் கற்பூர ஆராத்தியின் செவ்வொளியில் காண்பதற்கு அடியார்கள் நெருக்கத்தினால், தங்களைத் தாங்களே பிழிந்து கொண்டு மனமும், கண்களும் மரை மகிழும் நிலை வேறெங்கும் நிகழாததொன்று.

### ஓடிவரும் வேலன்

வீரக்கோலம் புனைந்த அவ்வேலன் அரக்கரை அழித்து, அமரரைக் காத்தருளினான். அடியார்க்கு அல்லல் எனில் சேயவன் சும்மா இருக்கமாட்டான். அடியார் உள்ளத்தில் அச்சம் அகற்றி, அவர்களின் அவலம் அறுத்திட அவர் முன்னே ஓடோடி வருவான்.

செருக்குற்ற சூரபன்மன் தேவர்களைச் சிறை வைத்த செயலைப் பொறுக்கமாட்டாத சிவகுமாரன் போர்க்களம் புகுந்தான். நலிந்தார் துயர் துடைத்தற்காகவே பரமசிவன் தமது நெற்றிக்கண்ணில் நின்றும் அறுமுகக் கடவுளை ஆறு சுடர்ப் பொறிகளாகத் தோற்றுவித்தார். தேவர் சிறை மீட்ட சேனாபதியின் செங்கைவேல் தன்னையும் தனக்கு முன்னர் சிறை வைக்கப்பட்டிருந்த அப்பாவிகளையும் குன்றம் துளைத்து கொடிய பூதத்தின் பெரும் பசிக்கு விருந்தாகாமல் காப்பாற்றியது.

வேலினைத் தாங்கிய பெருமான் மெலிந்தாரிடத்தில் மிகுந்த இரக்கம் கொண்டவர். வலியாரின் கொற்றத்தை அடக்கி மெலியாரை வாழ்விக்கும் பெருமான் அவர் கருணையினால் தோ... துணையாய் நின்ற மு... அருள் செய்வதை அறி... ஊழ்வயத்தால் ... தாக்கும்மாயின் அப்பகை... போகும் துன்பம் பெரித...

''வெற்றிவடிவேலன் — ...னுடைய வீரத்தினைப் பு...வோம்- சுற்றி நில்லா... போ — பகையே துள்ளி... குது வேல்'' என்று புது... கவி சுப்பிரமணிய பாரதி... எச்சரிக்கை செய்கின்... நினைதொறும், ... டொறும், பேசும் தே... எப்போதும் முருகன்... ழையே பாடுவார், யாரு... அஞ்சார். குமரக்கடவுள்... ளத்தில் கோயில் கொ... விட்டால் கூற்றுவனுக்... பயப்பட வேண்டியதில்... யான், எனது என்ற ... கற்று அருளுருவான ... களை இருகரம்கூப்... தொழுவோமாயின், ... வரும் வேலேந்தி புள்ளி...

— எஸ். கே. யோகநாதன் —

துன்பம் துடைக்கும் வேலைத் துதிப்பார்க்கு ஒரு நாளும் துயரமில்லை.

அடியார் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்ட குமரக்கடவுள், தமது அடியவருக்கு வரும் துன்பங்களைக் கண்டு சகிக்க மாட்டார். அடியார்களிடம் வைத்த மீதினிலே தனிவழியில் ... அவன் அருள் செய்... தொழுவார் துயர் து... அதோ துள்ளி வருகுது ... அவன் வண்ணத் தே... காட்சி தரும் மாட்சி இ... வாறு!

வேலுண்டு வினையி... மயிலுண்டு பயமில்லை.


தமிழ் மக்களின் துயர் துடைக்க
நல்லூர்க் கந்தன் துணை புரிய இறைஞ்சுகின்றோம்

**யோகாஸ் ஆடை அகம்**

16B, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

ஜப்பான் சாறி வகைகள் ஜேபி சாறி வகைகள்
சிறுவர்களுக்கான ஆடை வகைகள், சேட்டிங்,
சூட்டிங், றெடி மேட் ஜீன்ஸ், சோட்ஸ்

கிளைகள்: குமார் ரெக்ஸ்ரைல்ஸ்
பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி,
நல்லூர்.

நல்லூரான் வீதி நடந்தார்க்கும்
பொல்லா வினைகள் தீரும்

★ **கயல்விழி நகைப் பூங்கா** ★

(தங்கப் பவுண் நகைவியாபாரம்)
நவீன தங்க, வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
● ஓடர் நகைகள், 22 கரட் தங்கத்தில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்
224/B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சூரனைக் கொல்வதில் சூரனே!
சூரனாம் பொய்மையைத் தீரனே!

**செல்லையா சிவபாதலிங்கம்**

வைரக்கல் நகை வியாபாரம்
191, 11, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளை
விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.
ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.

நல்லைப் பதி வாழ் வேல்முருகா!
அன்பர் குறை தீர்க்க வா!

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரீகம்!
- ○ காலத்திற்கேற்ற வகையில் நவீன டிசைன்களில் ஆடைகளை தெரிவு செய்யவும்
- ○ மங்கள வைபவங்களுக்கான பட்டுச் சேலை வகைகளை தெரிவு செய்யவும்.
- ○ இறக்குமதி செய்யப்பட்ட ஆடை தினுசுகளுக்கும்

**சோபனா ஆடை அகம்** | **மதுரா பட்டுமகால்**
16, பெரிய கடை, யாழ்ப்பாணம். | 75, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

பச்சையுடுத்திப் பவனி யெழுந்திடும்
பாருக்கு நிறைந்தவனே - கையில்
வச்சிர வேலுடன் அச்சம் தவிர்த்திட
வந்தருள்வாய் முருகா!
★ அறுசுவை உண்டிகள்
★ குளிர்பான வகைகளுக்கு
யாழ். நகரில் சிறந்த ஸ்தாபனம்

**லிங்கம் கூல் பார்**

வெலிங்டன் சந்தி,
52 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

முகத்துக்கு
இணைந்த
கண்ணாடிகளைப்
பெறவும்



அழகுறப் பற்களைக் கட்டிக் கொள்ளவும்
நாட வேண்டிய இடம்:

**பி. ஐ. பர்னான்டோ**

542, ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்)
யாழ்ப்பாணம்.

கூர்வடி வேலினைப் போலறி வைத்தந்து
சீர் பல செய்தருள்வாய்!

சகல விதமான
★ சைக்கிள் உதிரிப்பாகங்கள்
★ பெயின்ற் வகைகள் ★ வாணிஸ்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

★ **நியூ விமாகி** ★

27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொல்லை வினை தீர்க்கும்
நல்லை நகர் கந்தனே!
இல்லையெனாது எமக்கு
நீ இன்னருள் புரிவாய்!

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரீகம்!
சுபமுகூர்த்த பட்டுப் புடைவைகளுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்

★ **ராசி சில்க்ஸ்** ★

70, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

வடிவேல் கொண்ட சண்முகனே
வந்தென் இடரை அறுப்பாயே!
இன்றைய உலகின்
நவீன முன்னோடிகள்

**ராகமாலிகா ஆடை அகம்**

4, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

மிதிவண்டி உதிரிப்பாகங்கள்
விற்பனையாளர்

**வையகம்**

768, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

றேடியோ, ரி. வி. டெக் உதிரிப்பாகங்களும், பழுது பார்த்தலும்.

**றேடியோ மனுவல்**

121, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகள் 22 கரட் தங்கத்தில்
சிறந்த முறையில் செய்து வழங்குபவர்கள்

**அர்ச்சனா நகைமாளிகை**

120B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அழகு மயில் வாகனனே
அபய மளித்து அருள்வாய்

ஈழத்தில் சிறந்த
★ பத்திரிகை முகவர்
★ தரமான பாண், பிஸ்கட்
விற்பனையாளர்
தொடர்பு கொள்ள:

**கனகா றேடர்ஸ்**

திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

வண்ணத் தேரிலே
வடிவேலனைக் காண வாரீர்!
★ தெளிகருவிகள் ★ உபகரணங்கள்
★ விவசாய கிருமி நாசனிகள்
★ களை கொல்லிகள்
★ பங்கஸ் நாசனிகள்
போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள:

**வ. வடிவேல்**
**லங்கம் பிராந்திய விற்பனையாளர்**

210, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சிறந்த ரக கலர், கறுப்பு வெள்ளை படங்களுக்கு அன்றும் இன்றும் பெயர் பெற்றவர்கள்

**பாரத் ஸ்ருடியோ.**

82 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

முருகன் புகழ்பாடி அருள் பெறுவோம்!
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்.
ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்.

**சீதா நகைமாளிகை**

27/ஏ, அர்ச்சுனா வீதி,
(ஸ்ரான்லி வீதி,)
யாழ்ப்பாணம்.

○ சுவையான புரியாணிக்கும்
○ மற்றும் சிற்றுண்டி வகைகளுக்கும்
இன்றே நாடுங்கள்!

**யாழ். றியோன்ஸ்**

சுவிற் அன் கிறீம் கவுஸ்
352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

உள்ளூர் கைத்தொழி...
ஊக்குவிக்கும்

**ஆர். வி. ஜி. பீடி க...**

58, குறுக்கு வீதி, நல்...

புடைவை வகைகளை த...
தெரிவு செய்ய

★ **சிற்றி ரெக்...**

(ஆலய முன்பாக)
256 A, பருத்தித்துறை ...
நல்லூர்.

வீடியோ அன் ஓடியோ ...
தரமான படப்பிடிப்...

**சேனாதிராசா புதல்...**

10, செட்டித் தெரு...
நல்லூர்.

★ தங்கப் பவுண் நகை வி...

**லலிதா நகை ம...**

''லலிதா மாளிகை...
213, கஸ்தூரியார் வீ...
யாழ்ப்பாணம்.

மூக்குக் கண்ணாடிகள் வ...

**எரிக் கணே...**

566, ஆஸ்பத்திரி வீ...
யாழ்ப்பாணம்.

★ தங்கப் பவுண் நகை...

**கன்னிகா நகை ம...**

17/3, கடற்கரை வீ...
குருநகர்.

● மளிகைப் பொருள்...
களஞ்சியம்

**கே. கே. ஏ...**
**கந்தையாபிள்...**

316, ஆஸ்பத்திரி வீ...
யாழ்ப்பாணம்.

○ ஆங்கில மருந்து - பா...
வகைகளுக்கு

**ஆர். வி. ஜி. மருந்...**

504, ஆஸ்பத்திரி வீ...
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

– 08 – 1993

நல்லூர் ... யாழ்ப்பாணம்

## ருகன் தீர்க்க!

ணையினால் தோன்றாத் ணையாய் நின்று முருகன் செய்வதை அறியாது வயத்தால் பகைவந்து முமாயின் அப்பகைப்படும் கும் துன்பம் பெரிதாகும்.

வெற்றிவடிவேலன் — அவ ட வீரத்தினைப் புகழ் ம்- சுற்றி நில்லாதே — பகையே துள்ளி வரு வேல்'' என்று புதுயுகக் சுப்பிரமணிய பாரதியார் சரிக்கை செய்கின்றார். னதொறும், காண் றும், பேசும் தோறும் போதும் முருகன் புக ய பாடுவார், யாருக்கும் ார். குமரக்கடவுள் உள் தில் கோயில் கொண்டு டால் கூற்றுவனுக்குமே பட வேண்டியதில்லை. ன், எனது என்ற செருக் அருளுருவான முரு இருகரம் கூப்பித் மூவோமாயின், துள்ளி வேலேந்தி புள்ளி மயி

— நாதன் —

ரிலே தனிவழியில் வந்து அருள் செய்வான். ழுவார் துயர் துடைக்க ா துள்ளி வருகுது வேல்! வண்ணத் தேரூர்ந்து சி தரும் மாட்சி இருந்த !

லுண்டு வினையில்லை; வுண்டு பயமில்லை. ★

# முருகனின் கூர்வேலும் மறை இறைஞ்சு கழலும்


ஆறுமுகம் கொண்ட சீர்வேல் - வஞ்சகர்க்
கஞ்சு முகந் தந்து துஞ்சிக்கும் கூர்வேல்
ஏறு நடை கொண்ட போர் வேல் - தெய்வம்
இல்லையென்பாருள்ளும் துள்ளும் உயிர்வேல்.
கனிவு தரும் வேல்.

முருகப் பெருமான் வேலாயுதத்தைத் தனது திருக்கரத்தில் பற்றிப் பிடித்திருக்கின்றார். இதனால் அவர் வேலே விளங்குகையன் எனப்படுகின்றார். வேலாயுதன் என்பதும் காரணப் பெயராகும். அவரது திருக்கரத்தில் திகழும் வேல் ஞாலத்தைக் காக்கும் சீலம் மிக்க ஆயுதம்; அது சூலமே போன்றது. இதனால் தான் வேலாயுதத்திற்கு மேலாயுதம் வேறில்லை எனலாம்.

வேல் பல அடை மொழிகளால் அணிபெற்றது வடிவேல், கூர்வேல், திறல்வேல், நவவேல், கவர்வேல், ஒளிவேல், கனிவேல், அருள்வேல், தனிவேல், ஞானவேல் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றது.

இவை யாவும் அதன் அழகையும், கூர்மையையும், ஆற்றலையும், புதுமையையும், கவர்ச்சியையும், பிரகாசத்தையும், கருணையையும், அருளாற்றலையும், தனித்தன்மையையும், மெய்ஞானச் சிறப்பையும் எடுத்துக் காட்டுகின்றன.

வேல் ஒரு போதும் தீங்கு செய்யாது. அருளலே அதன் வேலை. அழிப்பதல்ல அருளுவதே அதன் வேலையாகும். தீயவை செய்தாரேனும் முருகவேள் திருமுன் உற்றால் தூய



வர் ஆவர். வைதாரையும் வாழ வைப்பவன் வடிவேலன். எனவேவீறுகொண்டாருள்ளத்தில் ஊறும் சுவைவேல் அது.

இறைவனின் திருவடிகளின் கீழ் நிலைத்திருக்கின்ற பேரின்ப நிலையையே அடியார்கள் அவாவி நின்றனர். ''அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க'' என்றார் காரைக்காலம்மையார். ''கூசமலர்பாதம் தந்தருள வேண்டும்'' என்றார் மணிவாசகர். ''முருகன் கால் பட்டழிந்தது இங்கென்தலைமேல் அயன் கையெழுத்தே என்றார் அருணகிரியார். எங்கணும் திருக்கழல் அடி செறிந்து விளங்குவதைக் கண்டு வியப்படைந்தான் சூரபன்மன். மறை இறைஞ்சும் சேவடி முருகனது பாதாரவிந்தங்கள். எனவே அந்தப்பாதாரவிந்தங்கள் எமக்கு ஆதாரமாக அமைந்து எமக்கு அரணாக அமையும். ''இருநாள் பரவும் பரிசே பரிசாக அருள்வாய்'' என வேண்டுகின்றார் அநுபூதிச் செல்வரான அருணகிரியார். முருகனது

— வாசுகி இராமலிங்கம் —

அத்தகைய சிறப்புடைய வேல் நல்லூர் மூலஸ்டானத்தில் ஒளிர்கின்றது. அது எம்மைக் கவரும் வேல். எமக்கு திருவடிகளைப் பரவி மருள் நீங்கி, அருள் பெற்றுய்வோமாக. ★

## நல்லூரான் திருவடி!

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமடி - கிளியே
கவலையெல்லாம் போகுமடி.

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவோமோ நாங்களடி - கிளியே
ஆறுமுகம் தஞ்சமடி.

- யோகர் சுவாமிகள்


ளூர் கைத்தொழிலை ஊக்குவிக்கும்
.ஜி. பீடி கம்பனி
றுக்கு வீதி, நல்லூர்.

வை வகைகளை தரமாக தெரிவு செய்ய
ற்றி ரெக்ஸ் ★
(ஆலய முன்பாக)
, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

அன் ஒடியோ
மான படப்பிடிப்பாளர்
ராசா புதல்வர்கள்
, செட்டித் தெரு, நல்லூர்.

பவுண் நகை வியாபாரம்
நகை மாளிகை
ரிதா மாளிகை''
, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கண்ணாடிகள் வழங்குநர்
க் கணேஷ்
5, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ப் பவுண் நகைகளுக்கு
ா நகை மாளிகை
3, கடற்கரை வீதி, குருநகர்.

ளிகைப் பொருள்களின் களஞ்சியம்
கே. கே. ஏ.
தையாபிள்ளை
, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கில மருந்து - பால் மா வகைகளுக்கு
பி. ஜி. மருந்தகம்
, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

முருகன் தேர்ப்பவனி வீதியிலே ''மில்க்வைற்'' சோப் மீண்டும் பவனி கடைகளிலே
மில்க்வைற் தொழிலகம்
யாழ்ப்பாணம்.

வருவாய் முருகா அருள்வாய் குகனே!
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சிகளை அதி நவீன முறையில் வீடியோ படமாக்கிடவும். கலர் படம் (Photo) எடுத்திடவும்.
திரு வீடியோ விஷன்
மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

வள்ளி தெய்வானையுடன் வலம் வரும் நல்லைக் கந்தா!
உன் அருள் பெற வாழ்த்துகின்றோம். அனைத்திலும் குறைந்த விலையில் நிறைந்த மகிழ்வுடன் பெற்றுக்கொள்ள
★ சீமாட்டி ★
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தண்ணொளி வீசி தமிழன் வாழ்ந்திட ஏறுமயில் ஏறிவரும் இளையோனே உந்தன் தேர் ஏறிவரும் காட்சிதனை காண கண்ணாயிரம் வேண்டுமையா
ரவி அன் ராஜ் சில்க்ஸ்
77, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

தேரில் ஏறிவரும் திரு முருகன் அருள் யாவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கும்
★ சகல விதமான கைக்கடிகாரங்களையும் சுவர் மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள
குணம் அன் கோ
21 A, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

★ 22 கரட் தங்கத்தில் நகைகளை ஆடர் செய்து பெற்றிட
நகுலா ஜுவல்லறி
170 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மயில் ஏறும் மன்னவா! எம் மனமேற இங்கு வா!
o பாடசாலை புத்தகங்கள்
o இந்திய புத்தகங்கள்
o உபகரணங்கள்
o அச்சு வேலைகள்
o காகிதாதிகள்
SRI LANKA BOOK DEPOT
234, K K S. Road, Jaffna

தொல்லைகள் தீர்ப்பதில் தோழனே தொண்டர்க்கு அருள்வதில் வேலனே!
● சகல விதமான சிற்றுண்டி வகைகள்
● குளிர்பானங்கள்
போன்றவற்றிற்கு
வெஸ்கோ கூல் பார்
இல. 5 பலாலி றோட், திருநெல்வேலிச் சந்தி.

★ ஜெனரேற்றர் ★ ரி. வி. டெக்
புதிய படப் பிரதிகளை வாடகைக்கு வழங்குபவர்
வீடியோ எக்கனொமி
302, பலாலி வீதி, (ஆலடிச் சந்தி), யாழ்ப்பாணம்.

பெயின்ற் மற்றும் இரும்புப் பொருள்களுக்கு நாடுங்கள்
முருகன் றேடர்ஸ்
21, மணிக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

★ மளிகைப் பொருள்கள்
★ புத்தகம் இரவல் வழங்கல்!
சிவன் ஸ்ரோர்ஸ்
(பத்திரிகை முகவர்)
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதன பொருள்களை நிதான விலையில் வாங்க
ஜெயா அழகு சாதன மாளிகை
177A, மனசாற நிலைய வீதி,
கிளைகள்:
ஜெயா பென்ஸி ஹவுஸ்
160, நவீன சந்தை (உட்புறம்)
ரேகா அழகு சாதன நிலையம்
25, 48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

வடிவேல் கொண்ட சண்முகனே வந்தென் இடரை அறுப்பாயே!
★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கல வைபவங்களை சிறந்த முறையில் (மிக்ஸிங்) வீடியோ படம் பிடித்திடவும்
★ நெஞ்சில் நிலைக்கும் பழைய புதிய சினிமா பாடல்களை சிறந்த முறையில் ஓடியோ ஒளிப் பதிவு செய்திடவும் வீடியோ படக் கசெட்டுகளை வாடகைக்கு பெற்றிடவும்.
சுப்பஸோ
வீடியோ ஓடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

நல்லூர்க்கந்தா — நல்லருள் புரிவாய்
குறைந்த செலவில் நிறைவான உணவாகவும் போஷாக்குக் குறையை நீக்கவும் பாவியுங்கள்
''ஜீவாகாரம்''
100 கிறாம் ஜீவாகாரத்தில் 17கிறாம் புரதமும் 400 கிலோ கலோரி சக்தியுமுண்டு
உங்கள் தேவைக்கு ஏற்ப தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
அண்ணா தொழிலகம்
இணுவில்

நல்லைக் கந்தன் திருவருள் எல்லோர்க்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்
★ வீடியோ கமராக்களையும் T. V. டெக் போன்றவற்றையும் உடனுக்குடன் திருத்திக் கொள்வதற்கும்
★ மங்கள வைபவங்களை பல வருட அனுபவம் பெற்றவர்களால் சிறந்த முறையில் வீடியோ படம் எடுத்து பார்த்து மகிழவும்.
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

அருவமும் உருவு மாகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகிக்
கருணை கூர் முகங்கள் ஆறுங்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகமுய்ய.
இன்று மஹோற்சவ இரத உற்சவம்
கலக்சி
புகைப்பட சேவை
337, முதலாவது மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம் புதிய ஏஷியா (ஆண்கள்) சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: எஸ். வாணேஸ்வரன், இல. 152, கோவில் வீதி, நல்லூர். (26954)

### வெளிவந்துவிட்டது

தோத்திரத்திரட்டு, கூட்டு வழிபாடு ரூபா 30/- (மலிவுப்பதிப்பு) அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி-5658)

### உதவியாளர் தேவை

வைத்திய நிலையத்தில் தாதியாகக் கடமையாற்றக்கூடிய 25 வயதுக்குட்பட்ட பெண் உதவியாளர் (பயிலுனர்) தேவை. தொடர்பு: நடன முருகன் வைத்திய சாலை, சத்திரச் சந்தி, யாழ்ப்பாணம். (6415)

### பயிலுனர் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல ஸ்ருடியோ ஒன்றிற்கு ஸ்ருடியோ வேலை பழக ஆர்வமுள்ள 15—20 வயதிற்குட்பட்ட ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 31-8-93. மே/பா 914, உதயன். (சி-5666)

## செல்வச் சந்நிதி கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 16

தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோயிலின் வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை இரவு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை 5 ஆம் திருவிழாவில் இருந்து காலைத் திருவிழா நடைபெறும். 31 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(த)

## பம்பாய் நகரில் குண்டு வெடிப்பு

நேற்று முன்தினம் பம்பாய் நகரில் இரு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

நகரின் மத்தியில் காவல் நிலைய அறை ஒன்று அமைந்திருந்த கட்டடப் பகுதியில் ஒரு குண்டு வெடித்தது. இதனால் பொலீஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்தார்.

பம்பாய் புறநகர்ப் பகுதியில் கடை ஒன்றில் மற்றொரு குண்டு வெடித்தது அதனால் கடைச் சிப்பந்தி ஒருவர் கொல்லப்பட்டார்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களினால் நகரில் பெரும் பீதி ஏற்பட்டதாகவும் — பம்பாய் நகர்ப் பகுதி எங்கும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ)

## குடும்ப நல உதவியாளர் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஆக. 16

தேசிய பயிலுநர் சபையுடன் இணைந்து பெண் சுகாதாரத் தொண்டர்களுக்கான குடும்ப நல உதவியாளர் பயிற்சி நெறியை யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் நடத்தவுள்ளனர்.

ஒரு வருடகாலம் நடத்தப்படவுள்ள அந்தப் பயிற்சி நெறியில் சேரவிரும்பும் பெண் சுகாதாரத் தொண்டர்கள், நாளை செவ்வாய் மாலை 4 மணிக்கு முன்னர் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-5)

# 119ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 03 — 1969

மறைவு: 20 — 04 — 1993

## செல்வி இராஜினி இரட்ணம்

(மாணவி, 2ஆம் வருட உயிரியல் விஞ்ஞானபீடம்- யாழ். பல்கலைக்கழகம்)

திதி: 16 — 08 — 1993

சிறுவயதில் தந்தையை இழந்தாய் அதை தொடர்ந்து தாயை இழந்து அனாதையானாய். சகோதர உடன்பிறப்பு இன்றி தனித்து நின்றாய். இத்தனை துன்பங்களுக்கும் மத்தியில் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பை தொடர்ந்தாய். உன் ஆசைகள் நிறைவேறுமுன் எங்களை விட்டுப்பிரிய மனம் வந்ததோ அம்மா!

ஆறாத்துயரில் எங்களை ஆழ்த்தி திடீரென மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்பு இராஜியே, எத்தனை ஆண்டுகள் சென்றாலும், உன் அன்பு முகமும், நினைவுகளும் எங்கள் நெஞ்சை விட்டு நீங்காதம்மா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல மகா கணபதிப்பிள்ளையாரையும், காளித்தாயையும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து எமக்கு ஆறுதல் கூறியும், இறுதிச் சடங்கில் கலந்தும், சகல விதத்திலும் உதவி புரிந்த உற்றார், உறவினர் மற்றும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்கள், மாணவிகள், கொக்குவில்-நந்தாவில் மனோன்மணி அம்மன் மாதர் சங்க சனசமூக நிலைய உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்.

(26921)

# 41ஆம் நாள் நினைவலைகள்



## அந்தோனி சொலமன்

(பரியோவான் கல்லூரி-மைதான உதவியாளர்)

மண்ணில்: 19—01—1923

விண்ணில்: 08—07—1993

''உலகில் நீயும் வாழ்ந்த காலம்
உயர்ந்த வாழ்வின் பயணமே''
வாழ்வின் முடிவே சாவு-இறை
உலகின் நுழைவும் அதுவே - இறைவே!
இவர் சாவில் தருவாய் நிறைவே!
இனி உற்றார் மறப்பார் - தம்துயரே
கடவுளின் மாட்சிமை தோன்றும்
கல்லறை யாவும் திறக்கும்
இறந்தவர் யாவரும் உயிர்ப்பர்.
இறை நித்திய மகிழ்வினைப் பெறுவர்
இறுதியில் இவரும் எழுவார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 18 - 08 - 1993 புதன்கிழமை காலை 7-00 மணிக்கு தவசிகுளம் மிருசுவில் புனித காணிக்கை மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொண்டு, அன்னார் நித்திய பேரின்பத்தை அடைய இறைவனை இறைஞ்சுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவர் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தவசிகுளம்,
மிருசுவில்.

(6414)


# 34ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கத்தின் 34ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 18-08-1993 புதன்கிழமை காலை 9 மணிக்கு தலைவர் திரு சி. திருச்செல்வம் அவர்கள் தலைமையில் பாரதிதாசன் கல்வி நிறுவனத்தில் நடைபெறும். தவறாது சகல அங்கத்தவர்களையும் சமூகம்தரும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

க. உருத்திரசிங்கம்,
செயலாளர்.

(6417)

# ஏழாவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 28 — 03 — 1910

விண்ணில்: 16 — 08 — 1986

அமரர்

## ஏனஸ்ட் வைத்திலிங்கம் இராஜக்கோன்

(Rtd. Chief Clerk - Colombo Municipal Council)

அன்பினுக்கு ஆசான் நீரே
அறிவினுக்கு அகல்விளக்கு நீரே
விண்ணுக்கு விருந்து நீரே
வீட்டுக்கு விளக்கும் நீரே
எம் மனப் புண்ணுக்கு மருந்தும் நீரே
ஆருயிர் தந்தையே உமக்கு
கண்ணீரால் அஞ்சலியை நாமே
காணிக்கை ஆக்குகின்றோம்.

— அன்புப் பிள்ளைகள்.

141/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(26935)

# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்: 10 — 07 — 1992

ஆண்டவன் அடியில்: 17 — 07 — 1993

## விக்கினேஸ்வரன் துஷாரா

(துஷா)

புன்சிரிப்பு சிந்துகின்ற பூமுகம் படைத்தவளே -
அம்மா,
தீராத கொடிய நோய் உம்மை தீர்த்தழிக்க -
வந்ததுவோ,
அன்பே ஆருயிரே அரவணைத்து நாம் வளர்த்த -
செல்வக் கனியே அம்மா
தாயைப் பிரிந்து தலைவன் வழி செல்வதற்கு நீர் -
உதித்த நாளிகையில்
ஓர் ஆண்டும் ஓர் வாரமும் தானோ அனுபவிக்க -
ஆண்டவன் தந்தார்
மகளே துஷா எம்மிடமே ஓடி வருவாயென -
ஏங்கித் தவிக்கின்றோம்.

எம் குழந்தையின் கொடிய நோயைத் தீர்ப்பதற்கு இரவு பகல் பாராது துடித்து உற்றவர் போல் உறுதுணையாய் உதவியோர்க்கும், எம்பிள்ளையின் மரணச் செய்தி கேட்டு ஓடி வந்தோர்க்கும், எமக்கு ஆறுதல் வார்த்தைகள் அளித்துச் சென்ற உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவர்க்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, சகோதரர்கள்
உற்றார், உறவினர், அயலவர்கள்.

சி. விக்கினேஸ்வரன்,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

(26937)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்:

# வெற்றிப் பயன் விளைக்குக!

நல்லூர்க் கந்தன் இன்று காலை தேரேறி வந்து தனது பக்தர்களுக்கு அருட்காட்சி தருகின்றான். அவன் தேரூர்ந்து வரும் வீதியெல்லாம் அருள் மணக்கும். ஞானப்பழம் மணக்கும். அதனால் முருகன் அடியார்களின் மனம் இனிக்கும்.

குடாநாட்டில் ஆலயங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. அங்கெல்லாம் தேர்த்திருவிழாக்கள் நடப்பதுண்டு. நல்லைக் குமரனின் தேர்த்திருவிழாவுக்கோ தனிச்சிறப்புண்டு. அது யாழில் வாழும் சைவத் தமிழரின் தேசியத் திருவிழாவாக அமைகிறது எனலாம்.

சிங்களவர்களுக்கு - பௌத்தர்களுக்கு எப்படி கண்டிப் பெரஹரா தேசிய சமய - கலாசாரப் பெருவிழாவாக அமைகிறதோ, அதேபோல குடாநாட்டு சைவத் தமிழர்களுக்கு நல்லூர்க்கந்தனின் தேர்த்திருவிழா ஒரு தேசிய சமயப் பெருவிழாவாகக் கொள்ளத்தக்கது.

நல்லூர் நாற்சிறப்புடைய நல்ல ஊர். தமிழர்களின் பெரு அரசமைந்து அரசாட்சி நடந்த சிறப்பு நல்லூருக்குள்ள வரலாற்றுப் பெருமை. தமிழ்க் கடவுள் கந்தப் பெருமான் நூற்றாண்டு காலமாக இருந்து அருளாட்சி நடத்தும் தெய்வீகம் விளையும் திருவூரும் நல்லூரே. சைவத்துக்கும் தமிழுக்கும் ஆபத்து விளைந்த வேளை அதனை தடுத்து அவை இரண்டையும் காப்பாற்றி வாழ வைத்த நாவலர் பெருமானை யாழ்ப்பாணத்துக்கு வழங்கிய பெற்றி உடையதும் நல்லூரே. யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஞானப் பரம்பரையினை - அநுபூதிமான்களை நல்கியதும் நல்லூரான் பெருவீதியே.

இத்தகைய நாற்சிறப்புடைய நல்லூர் யாழ்ப்பாணத்தின் எப்போதும் தலையாய நகரமே. ஆகையாலும் நல்லூரில் நடக்கும் தேர்த் திருவிழா தேசியத் திருவிழாவாவதற்கு எல்லாத் தகுதியும் பொருத்தமும் உடையதே.

தமிழர்களில் முருக பக்தரே அனேகர். கந்தன் கழல் இறைஞ்சி கடிவினை தீர்ப்பவர்கள் அவர்கள். தனது சரணங்களில் உள்ளக் கமலத்தைச் சார்த்தி வணங்குவோருக்கு முருகன் வெற்றியே தருவான். அவனது வீரவேல் ஆணவத்தையும் அகங்காரத்தையும் அழுங்காற்றினையும் பிளந்து மாய்க்க வல்ல கூர் வேல். வெற்றியே தரும் வெற்றிவேல்.

தாங்கள் எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருப்பதால் தமிழர்களை அடிமைகளாக வைத்திருக்க வேண்டும்; அவர்களை அல்லற்படுத்த வேண்டும்; இன்னல் கொடுக்க வேண்டும் என்று சிங்கள மக்கள் அசுரத்தனமாக நடக்கிறார்கள். தம்மை வெல்ல முடியாது என்ற ஆணவமும், அகங்காரமும், அகந்தையும் அவர்களிடமும் நிறைந்திருக்கின்றன.

அதனால் ஈழத்தில் இப்போது சூரபன்மனுக்கும் கந்தவேளுக்கும் நடந்தது போன்ற யுத்தம் ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தமக்குரிய வாழ்வுரிமைகளுடன் வாழ்வதற்காக, நல்லூரில் இருந்தது போன்ற ஒரு தமிழரசை நிறுவுவதற்காக, தமிழர் நடத்துவது தர்மயுத்தம். தமிழர்களை அழித்துவிடச் சிங்களவர் நடத்துவது அதர்ம யுத்தம். அது ஆணவ மேலீட்டால் எழுந்த அசுரத்தனம் நிறைந்த அதர்ம யுத்தம்.

ஆணவத்தை வென்ற முருகனின் அயில் வேல் போலத் தமிழர்களிடம் மன உறுதி என்ற வேல் உண்டு. அதனால் இறுதி வெற்றி அவர்களுக்கே. அதனை உறுதி செய்து வந்த வினை தீர்க்கும் கந்தப் பெருமானின் கழல்களை இறைஞ்சி அவனது துள்ளும் வேலைத் துணை சேர்ப்பது மேலும் பலம் தரும்; வெற்றிப் பயன் விளைக்கும்.

# வவுனியா ப.நோ.கூ.சங்கம் உணவு வழங்குவது நிறுத்தம்

கொழும்பு, ஆக. 16

வவுனியாவில் சகல உணவு விநியோகப் பணிகளையும் தற்காலிகமாக நிறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

உலர் உணவு, உணவு முத்திரைக்கான உணவு வகைகள், மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகளுக்குரிய பொருள்கள், குழந்தைகளுக்கான பாலுணவு மற்றும் நிவாரண உணவுப் பொருள்கள் விநியோகம் செய்ததற்கு அரசிடமிருந்து 64லட்சத்து 89ஆயிரத்து 176ரூபா சங்கத்துக்கு வருமதியாக உள்ளது என்றும் இத் தொகை கிடைக்கும் வரை விநியோக வேலைகளை நிறுத்தி வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டுறவு சங்கம் புனர்வாழ்வு, புனர் நிர்மாண, சமூக சேவைகள் அமைச்சர் பி. தயாரத்தினவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கஷ்டங்களுக்கு மத்தியில் தனியார் துறை வர்த்தகர்களிடம் இருந்து உணவுப் பொருள்களை கடனுக்குப் பெற்று விநியோகம் செய்த போதிலும் இவற்றுக்கான கொடுப்பனவுகள் காலக்கிரமத்தில் கிடைப்பதில்லை என்றும், எனவே இது விடயத்தில் உடனடியாக அமைச்சர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக் கடிதத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (த)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று திங்கட் கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:

★ நாவலர்மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசை அரங்கில் மாலை 6 மணி முதல் 6 45 மணி வரை பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் சமயச் சொற்பொழிவு, 7-15 தொடக்கம் 9-00 மணி வரை திரு. என். வீ எம். நவரத்தினம் பாட்டு.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5 - 15 — 6 - 15 ''தர்மம் வெல்லும்'' எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை: நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்—

காலை 8 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரை சூரபன்மன் வதைப் படலம் புராண படனம்.

மாலை 5 30 — 6-30 மணி வரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி 'இரணியன் இரங்கல்' எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம்.

(க-111-126)

## 'குமாரி' திரும்பியது

யாழ்ப்பாணம், ஆக. 16

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கி முடித்த 'குமாரி' கப்பல் 40 பயணிகளுடன் நேற்று திருகோணமலைக்கு சென்றது.

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில்-முதல் பத்து நாட்கள் நடந்த பரீட்சையின் விடைத்தாள்களும் 'குமாரி' யில் எடுத்துச்செல்லப்பட்டன.

'குமண' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-3-9)

## தென்னாபிரிக்கா வெற்றி!

கொழும்பு, ஆக. 16

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் அணிக்கும் இடையில் நேற்று காலியில் முடிவடைந்த மூன்று நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது. ஓட்ட விவரம் வருமாறு:-

இலங்கை: 90 ஓட்டங்கள், 182 ஓட்டங்கள்.

தென்னாபிரிக்கா 285 ஓட்டங்கள்.

(உ-3)

# கவிதைத் தேர் வலம்

## உலாவரும் செவ்வேள் போற்றி!

அடங்கலர் தீயால் வாதும்
 அடலை மேடாகும் போதும்
கடம்பவேள் வாயில் சார்ந்துள்
 கருணையே வேண்டி நிற்பர்
இடும்பைகள் துயரம் போக்கி
 இதமியம் அளிக்கத் தேரில்
உடம்பிடி ஏந்தி வீதி
 உலாவரும் செவ்வேள் போற்றி!
செந்தமிழ் ஈழ நாட்டின்
 சேருறு தலைவன் நல்லைக்
கந்தவேள் மலர்கள் தூவிக்
 கழல் பணிந்திடுவர் கேளாம்
சந்ததம் மகிழ்வு பொங்க
 சஞ்சலம் நீங்கத் தேரில்
செந்துளிர்ப் பாவை கூடச்
 சேந்த! நீ வருக போற்றி!

— நெடுந்தீவு லக்ஸ்மன்,

## கூடிவருது கும்பிடுமுள்ளத்திலே

ஆடிவருது ஓடிவருது ஆலய வீதியிலே
தேடிவருது நாடிவருது தேடுமிதயத்திலே
கூத்தாடிவருது கூடிவருது கும்பிடுமுள்ளத்திலே
ஆறுமுகத்தானை ஏற்றிவருது ஆடுங்கள் பாடுங்களே

சுற்றிச் சூழநின்று சூழ்ச்சி பலசெய்த சூரனுடன்
 பிளந்தான்
சுற்றி வந்தின்றெமை கொல்லும் கொடுங்கோன்
 சிந்தையரை சிதைப்பான்
கந்தனே கதியெனக் கைபேந்திக்கதறியோர்
 கவலையெலாம் களைவான்
ஆற்றாதழுத நம் கண்களில் ஆனந்தக் கண்ணீரே
 காண வைப்பான்

— ''கோபால சண்முகம்''

## வல்லமை தந்திடு

தியாகம் நிறைந்து விட்ட வீதியில்
தேரேறி வரும் குமரா
அக்கிரமத்தை அழிக்க
அன்று வேலோடு சென்று
வீழ்த்தினாய்! அரக்கர்களை
விலங்குடைக்க நாமின்று
கருவிகளேந்திக் கொண்டு
குருதியோடும் மண்ணிலிருந்து
தேரேறி வருமுனக்கு
தோத்திரங்களிசைத்து
அருள் வேண்டிநிற்கின்றோம்
மண்ணிலே வாழவிடு
மண்ணை மீட்க வல்லமை
தந்திடு; தேரேறி வரும் குமரா!

— மீசாலையூர் கமலா.

# நல்லூர் கந்தனின்......

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யரும், வெறித்த பார்வையரும், குறுகிய தாடியரும், சிங்கார நடையரும் கந்தைத் துணியை அணிந்தவருமாகிய செல்லப்பனை நல்லூர்த் தேரடியாகிய முச்சந்திக்குக் கொண்டு வந்து குந்தப்பண்ணி அருட்பரம்பரைக்கு வித்திட்டார் கடையிற் குருநாதனாகிய கடையிற் சுவாமிகள்.

### கடையிற் சுவாமிகள்

யாழ்ப்பாணம் வைரமுத்துச் செட்டியார் தமது இந்திய யாத்திரையின் போது, நித்தியானந்தா என்னும் தீட்சை நாமம் பெற்ற கடையிற்சுவாமிகளை ஈழம் வந்து மக்களை ஈடேற்றுமாறு பணிவன்பாகக் கேட்டுள்ளார்.

வைரமுத்துச் செட்டியார் ஒரு வெள்ளிக்கிழமை நல்லைக் கந்தனைத் தரிசிக்கச் சென்ற வேளை ஞான குருவாகிய கடையிற் குருநாதனை தமக்கே தந்தருள வேண்டி நல்லைக் கந்தனைக் கைகூப்பி வேண்டினார். நல்லைப் பகுதியில் இருந்து வீடு சென்றவருக்கு ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியம். நல்லூரானைக் கும்பிட்ட பலனை கையோடு கண்டு கொண்டார். தமது குருநாதன் தமது வீட்டிற்கே வந்த அதிசயத்தைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார் வைரமுத்துச் செட்டியார்.

இங்ஙனம் யாழ்ப்பாணம் வந்த கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாண மக்கள் செய்து கொண்ட பெருந்தவம் காரணமாக யாழ்ப்பாண வீதிகளில் சஞ்சரித்து தமது சொல்லாலும், செயலாலும் பார்வையாலும் எத்தனையோ பக்குவ ஆன்மாக்களுக்கு அருள் செய்து வந்தார். நல்லூர்க் கோயில் வீதி வழியாகச் செல்லும்போது எங்கள் செல்லப்பர் அவரை அண்டி வணங்கி எலுமிச்சம்பழம் ஒன்றை வழங்கினாராம்.

செல்லப்பரின் பரிபக்குவ நிலையை உணர்ந்த கடையிற்சுவாமிகள் பக்கத்திலே இருந்த கடலைக்காரியிடம் ஒரு முழு ரூபா வாங்கி வெற்றிலையில் வைத்து செல்லப்பருக்குக் கொடுத்து அவர் தலைமேல் ஒரு குடையைப் பிடித்து கைகளைக்கட்டி 'ஓடடா' என்றாராம். அந்தக்கணமே பூமி பூலோகம் தெரியாத தன்மை செல்லப்பருக்கு ஏற்பட்டதாம். அந்நிலை பதினைந்து நாட்களுக்கு ஏற்பட்டது. அத்துடன் செல்லப்பர் மூத்தராகி விட்டார்.

### யோகர் சுவாமிகள்

யாழ்ப்பாணத்தவருக்கு ஒளி விளக்காக விளங்கிய யோகர் சுவாமிகள் இளைஞன் யோகனாக ஆத்மதாக மேலீட்டால் ஒரு குருவைத்தேடி அலைந்த காலத்திலே நல்லூர்த் தேரடியில் தமது ஞானகுருவான செல்லப்பர் சுவாமிகளின் அருட்பார்வைக்கு இலக்கானார். குருநாதனைக் கண்ட யோகநாதனின் மனக்கிடக்கையை வெறும் வார்த்தைகளால் கூற முடியாது.

குருநாதனைத் தரிசித்த அனுபவத்தை அவரே கூறுகிறார். ''ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரின் பேசாதனதெல்லாம் பேசினான் கூசாமல் நின்றேன் நீவாரடா வென்றே அதட்டினான் அன்றேயான பெற்றனன் அருள்''— என்றும்,

''தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன்''— என்றும் அவர் வர்ணிக்கிறார்.

''சீராரும் நல்லூரில் தேரடியிலே இருந்து ஆரடா நீ என்று சொன்ன அப்பனே கண் வளராய்'' என்று தமது குருநாதனுக்குத் தாலாட்டுப் பாடுகிறார்.

ஒருபொல்லாப்புமில்லை யென்பான்
உண்மை முழுதுமென்பான்
செப்படி வித்தையென்பான்
வெட்டவெளியிலே என்னை விட்டான்
நல்லூர் வீதியில் என்னைத் தொட்டான்— எனவும் தமது குருநாதர் பற்றி இயம்புகிறார்.

நல்லூர்க் கோயிலில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆறுமுகச் சிவனும் தேரடியில் வீற்றிருக்கும் செல்லப்பதேசிகரும் ஒருவரே எனும் தெளிவு பெற்றார். தனது ஞானகுரவன் போகுமிடங்கள் தோறும் பின் தொடர்ந்து செல்வார்; மழையும், வெய்யிலும், பசியும் உடற்றினாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் கடு நடையாய் நடப்பார்கள். ''தீர்த்தம் ஆடமவே ஆடிவிட்டோம்'' எனக்கூறிக் கொண்டு திரும்புவார்கள். குருவின் கடும் வார்த்தைகளை ஆதி மொழியாகக் கருதி அவற்றுள் வரும் மகா வாக்கியங்களை பொறுக்கி எடுத்தார்.

மேலும் யோகசுவாமிகள் தமது சீடரான கதிரடி மார்க்கண்டு சுவாமிகளை ''யாத்திரைக்குப் போக வேண்டாம் என்றும் அங்கும் இங்கும் அலையாதே'' என்று கூறியபோதும் ''இது தான் (சரீரம்) தேர்''

''இதுதான் (சரீரம்) நல்லூர்'' என்று கூறி நல்லூரானின் தேருக்குப் போகுமாறு பணித்துள்ளார். இதுபோல் சந்த சுவாமிக்கு (முன்னாள் இலங்கை கவர்னர் சோல்பரியின் மகன்) அமெரிக்க சுப்பிரமணியசுவாமிகள், ஜேர்மனி சுவாமி (கௌரிபாலா) ஆகியோரிற்கும் நல்லூரானின் தேரைத் தரிசிக்குமாறு கூறியுள்ளார்.

இவ்வாறெல்லாம் பெருமை பெற்ற நல்லூரானின் தேர்த் திருவிழாவாகிய இன்று அடியோமும் நல்லூரான் திருவடியையும் தேரடியையும் வணங்கி ஆறுமுகனின் அருளைப் பெறுவோமாக. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னாரில் 6 மைல் தூரம் படையினர் பின்வாங்கினர்!

யாழ்ப்பாணம், ஆக. 16

மன்னார் மாவட்டத்தில் பல இடங்களில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்காப் படையினர் சுமார் ஆறு மைல் நீளமான பிரதேசத்திலிருந்து பின்வாங்கிச் சென்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் மண்கிண்டி மலை மற்றும் பொலனறுவைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைப் போன்று மன்னார் மாவட்டத்திலும் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சம் காரணமாகவே படையினர் முக்கிய பிரதேசங்களிலிருந்து பின்வாங்கியதாகக் கருதப்படுகிறது.

கடந்த வருடம் அக்டோபரில் ''வேக அதிரடி'' இராணுவ நடவடிக்கை மூலம் ஸ்ரீலங்கா இராணுவம் ஆக்கிரமித்த — அடம்பன் முதல் உயிலங்குளம் வரையான— பிரதேசத்திலிருந்தே படையினர் தற்போது பின்வாங்கியிருக்கின்றனர்.

மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ''வேக அதிரடி'' நடவடிக்கையினால் 2 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்தனர் என்பதும் —

மேலும் இரண்டாயிரம் பொதுமக்கள் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் அகப்பட்டனர் என்பதும்—

பெருமளவு விளை நிலங்கள் நாசமாக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கவை. (உ)

## புதிய முகாம்

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்து இறக்கத்தில் ஸ்ரீலங்காப் பொலீஸார் புதிதாக முகாம்களையும் காவலரண்களையும் அமைத்துள்ளனர். அப்பாதையால் போகும் பொதுமக்களை பொலீஸார் சோதனையிடுவதாகவும் அவர்கள் மீது கெடுபிடிகளைப் பிரயோகிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## உலகப் புகழ்

'சிம்பொனி' என்ற மேலைநாட்டு இசையை 77 இசைக் கருவிகளைக் கொண்டு அமைத்து இளையராஜா உலகப் புகழ் பெற்றுள்ளார்.

லண்டனில் உள்ள 'றோயல் பில் ஹாமொனிக்' என்ற இசைக் குழுவுடன் சேர்ந்து இந்த இசையை இளையராஜா வாசித்தார்.

'சிம்பொனி' இசை அமைத்திருக்கும் முதல் இந்தியரும், முதல் ஆசிய நாட்டவரும் இளையராஜாவே ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இரவு நேரங்களில் பயணம் செய்வோரும், தமது உறவினர்கள் நண்பர்களின் வீடுகளில் தங்குவோரும் படையினரால் தாக்கப்படுவதாகவும் கைது செய்யப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

உலக வங்கியும் ஜப்பானும் மற்றும் ஐரோப்பிய நாடுகளும் அபிவிருத்திக்கென ஸ்ரீலங்கா அரசுக்குப் பெருமளவு பணத்தை உதவியாக வழங்கி வருகின்றன.

ஆனால் ஸ்ரீலங்காப் படை தனது படைகளுக்கு நவீன ரக ஆயுதங்களையும், குண்டுவீச்சு விமானங்களையும், வெடிமருந்துகளையும் வாங்கவே இந்த உதவிகளைப் பயன்படுத்துகின்றது.

இந்த உதவிகளை ஸ்ரீலங்கா அரசு வறிய மக்களின் நலனுக்கோ அல்லது நாட்டின் அபிவிருத்திக்கோ பயன்படுத்துவதில்லை.

இந்த உதவிகள் தமக்கும் சேர்த்தே வழங்கப்படுவதாக தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு இந்த உதவிகளைப் பயன்படுத்தி இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்து, அவற்றை வடக்கு, கிழக்கு மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தி வருகிறது.

அத்துடன் சர்வதேச சட்டங்களையும் மீறி ஸ்ரீலங்கா அரசு செயற்படுகிறது.

பொதுமக்கள் மீதும் குடிமனைகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், ஆலயங்கள் ஆகியவை மீதும் குண்டுவீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களை ஸ்ரீலங்காப் படைகள் ஈவிரக்கமின்றி மேற்கொள்கின்றன.

இந்த மனித விரோதசெயல்களால் பொது மக்களுக்கு அதிகளவு இழப்புகள் ஏற்படுகின்றன.

பொருளாதாரத் தடையாலும் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய செயல்களை நிறுத்துமபடி ஐ. நா. சபையைக் கோருகிறோம்.

# இலவச சீருடை, உணவு கட்டுப்படுத்த ஆலோசனை

யாழ்ப்பாணம், ஆக. 16

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச மதிய உணவு, சீருடை ஆகியனவற்றின் அளவைக் குறைப்பது குறித்து அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கென தற்போது செலவிட்டுவரும் பெருந்தொகைப் பணத்தை மட்டுப்படுத்தி வழங்குவதால் அரசின் தற்போதைய நிதி நெருக்கடிக்கு ஓரளவு சமாளிக்க முடியும் என்று கருதப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# மலிவு விலையில் பனடோல்; செஞ்சிலுவை விநியோகிக்கும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை பொதுமக்களுக்கு மலிவு விலையில் பனடோல் வில்லைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கட்டுப் படைத் தலைமையகத்தின் அனுமதியுடன் இங்கு தருவிக்கப்படும் பனடோல் வில்லைகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பொதுமக்களுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை—மலிவு விலையில் பனடோல் வில்லைகளைத் தொடர்ந்து பெறும் வாய்ப்புகளைப் பொறுத்து ஏனைய மருந்து வகைகளையும் தருவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் தெரிவித்தார். (த-163)

## கைதிகள் பரிமாற்றம்:

# அரச தரப்பின் அறிவிப்பு வெறும் பிரசாரமே!

யாழ்ப்பாணம், ஆக. 16

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள சிங்கள யுத்தக் கைதிகளுக்குப் பதிலாக, அரசுப் படைகளின் பாதுகாப்பில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை பரிமாற்றம் செய்வது என்ற அரசின் அறிவிப்பு, வெறும் பிரசாரத்தனமானது மட்டுமே என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

யுத்தக் கைதிகளைப் பரிமாற்றம் செய்வது என்ற அரசின் பிரசாரமானது கொழும்பு சென்றுள்ள யுத்தக் கைதிகளின் உறவினர்கள் அரசிற்கு எதிராக உருவாக்கும் எழுச்சியை திசைதிருப்பும் நடவடிக்கையே என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

# தபால்களை தரம் பிரிக்க இனி எலக்ரோனிக் முறை

யாழ்ப்பாணம், ஆக. 16

தபால் தரம்பிரிக்கும் வேலைகளுக்கு இலங்கையில் எலக்ரோனிக் முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு 35 கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான கட்டட நிர்மாண வேலை வருட இறுதிக்குள் கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இலங்கையிலுள்ள பிரதம தபாற் கந்தோர்கள், உப தபாற் கந்தோர்கள், ஏஜென்ஸி தபாற்கந்தோர்கள் அனைத்தும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளன. (த-15)

# பீரங்கிப் படகுத் தாக்குதலுக்கு அஞ்சி இரணைதீவு மக்கள் இடம்பெயர்வு

இரணைதீவுப் பகுதியை நோக்கி அடிக்கடி பீரங்கிப் படகிலிருந்து ஷெல் வீச்சு நடத்தப்படுவதால் அப்பகுதி மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து முழங்காவில் பகுதியில் தங்கியுள்ளனர்.

பீரங்கிப் படகின் தாக்குதல்களினால் இப்பகுதியிலுள்ள தேவாலயம், பாடசாலைகள், கடைகள் பலத்த சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து வந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

இரணைதீவு பாடசாலைகளின் ஆசிரியர்கள் வலைப்பாடு பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்றனர். (த 117)

# மந்திகை ஆஸ்பத்திரியில் மீண்டும் பற்சிகிச்சைப் பிரிவு

வடமராட்சி, ஆக. 16

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சுமார் இரண்டு வார கால இடைவெளிக்குப் பின்னர் பற்சிகிச்சைப் பிரிவு மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது.

இங்கு கடமையாற்றிய பல் வைத்திய அதிகாரி விடுமுறையில் சென்றதையடுத்து கடந்த இரு வார காலமாக இப்பற்சிகிச்சைப் பிரிவு செயல்படாதிருந்தது.

விடுமுறையில் சென்ற பல் வைத்திய அதிகாரி கடமைக்குத் திரும்பியதையடுத்து பற்சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. (த-173)



# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லதம்பி வள்ளியம்மை

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லதம்பி வள்ளியம்மை அவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நல்லதம்பி அவர்களின் அன்பு மனைவியும், பஞ்சாட்சரம், சிங்கநாயகம் (நீர்கொழும்பு, வர்த்தகர்), சொர்ணகாந்தி (கிளிநொச்சி), நாகலட்சுமி, தனநாயகம், வசந்தநாயகம் (வசந்தன்), ஜெயநாயகம் (ராசு) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி (நீர்கொழும்பு, அரசினர் வைத்தியசாலை), சிவபாதம், சரோசா, சுகந்தினி, தனலட்சுமி ஆகியோரின் மாமியுமாவரார்.

அன்னாரின் சமக்கிரியை இன்று பிற்பகல் 3 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
பிள்ளைகள்

கொக்குவில் மேற்கு,
கேணியடி,

(26958)

## சோமநாதபிள்ளை சிவரத்தினம்

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வர்த்தகர் சோமநாதபிள்ளை சிவரத்தினம் 6-8 93இல் வேலணை மேற்கில் காலமானார்.

இவர் இரத்தினத்தின் அன்புக் கணவரும், பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற சோமநாதபிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (வீரவாகு) - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், திருமதி கலா மகாலிங்கம் (பிரான்ஸ்), திருமதி ரூபி கருணாநாதன், தெட்சணாமூர்த்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி, கணேசமூர்த்தி, காலஞ்சென்ற சிவேஸ்வரி, ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), ஸ்ரீமூர்த்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மகாலிங்கம் (கனடா), கருணாநாதன் (கி. சே. அலுவலர்) ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்ற திருமதி பாக்கியலட்சுமி - வீரசிங்கம், திருமதி அன்னலட்சுமி - சண்முகலிங்கம், முருகேசு (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வீரசிங்கம், சண்முகலிங்கம், மங்கையர்க்கரசி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வேலணை மேற்கில் நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கருணநாதன். (ஆனந்தன்)

உசன் (கந்தசாமி கோவிலடி),
மிருசுவில்.

(26959)





நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு
**யாழோசை மன்றம்**
வழங்கும்

# ★ இசை விழா ★

**இன்றைய நிகழ்வுகள்**

இடம்: நல்லை ஆதீன மண்டபம்
நேரம்: மாலை 6 00 மணி முதல் 9·00மணி வரை

6·00 — 6·30 மணி: வேணுகான இசை
(யாழோசை மாணவர்கள்)
- பரணிதரன் — புல்லாங்குழல்
- தவேந்திரன் — வயலின்
- சுஜன் — மிருதங்கம்
- இந்திரன் — தபேலா

6·30 — 6·45 மணி: உரைகள்
- சிறப்புரை — திரு. இன்பன் (விடுதலைப்புலிகள் - மாணவரமைப்பு)
- பிரதம விருந்தினர் உரை — திரு. போ. பாலசிங்கம் (யாழ். மாநகரசபை ஆணையாளர்)

6·45 — 7 30 மணி: வயலின் இசை
- அ. மேகலா — வயலின்
- பா. நாகவல்லி — வயலின்
- எஸ். கமலதாஸ் — மிருதங்கம்
- எஸ். சிவா — கடம்

7·30 — 8 00 மணி: வீணாகான இசை
- பா. சர்மிளா — வீணை
- சி. துரைராஜா — மிருதங்கம்

8·00 — 8·30 மணி: மங்கள இசை
- ரவி, ரஜி (சகோதரர்கள்) — நாதஸ்வரம், தவில்



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலுள்ள அச்சகத்தில் 16-08-1993 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org